பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

63, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
63, නල්ලූර් හරස් පාර, නල්ලූර්, යාපනය.
63, Nallur Cross Street, Nallur, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: NP/09/FRM/CIR-FIN/14/2017 07.03.2017

**மாகாண நிதிச் சுற்றுநிருப இல: PF /01/2017**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**மாகாண நிதிவிதி: 407ன் பிரகாரம், பிணைப்பணம் செலுத்தவேண்டிய அலுவலர்களிடமிருந்து பிணைப்பணத்தைப் பெற்றுக்கொள்ளல்**

மாகாணசபையின் பணத்தை அல்லது களஞ்சியப் பொருட்களை பெறுவதற்கு அல்லது அவற்றைக் கட்டுக்காப்பில் வைத்திருப்பதற்கு நிர்வாக ரீதியாகப் பொறுப்பாக உள்ள அல்லது அதிகாரக் கையளிப்பின் கீழ் குறித்த பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் உறுதிச்சீட்டுக்களை அத்தாட்சிப்படுத்துகின்ற அல்லது மாகாணசபைக் கணக்குகள் மீதான காசோலைகளில் கையொப்பமிடுகின்ற அலுவலர்கள் மாகாண நிதி விதி: 407ன் பிரகாரம் பிணைப்பணம் செலுத்தவேண்டிய கடப்பாடுடையவர்களாவர்.

2. இவ்வகையில், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் ஒவ்வொருவரும் பிணைப்பணம் செலுத்தவேண்டிய தமது கீழ்நிலை அலுவலர்கள் பிணைப்பணம் செலுத்துவதனை உறுதிப்படுத்திக்கொள்ளல்வேண்டும்.

3. பொதுவாக பிணைப்பணத்தினை அரச வங்கி ஒன்றில் சேமிப்பு வைப்பாக / நிலையான வைப்பாக உரிய அலுவலர்களின் பெயரில் வைப்பிலிட்டு சேமிப்புப் புத்தகத்தினை அல்லது நிலையான வைப்புச் சான்றிதழினை உரிய கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் அல்லது உரிய பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் உரிய உத்தியோகத்தரினால் பிணைப்பணம் செலுத்தவேண்டிய பதவிக்கு நியமிக்கப்பட்டு இரு மாதங்களினுள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. மேலே பந்தி 1ல் குறிப்பிடப்பட்டவாறு பிணைப்பணம் செலுத்தப்படவேண்டிய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த பிணைப்பணத் தொகை வருமாறு:

| இல | அலுவலர்கள் | தொகை (ரூபா) |
|---|---|---|
| 01 | செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் | 30,000.00 |
| 02. | திணைக்களத் தலைவர்கள் (பணிப்பாளர்கள், ஆணையாளர்கள்) பிரதம கணக்காளர்கள் | 25,000.00 |
| 03. | பிராந்தியத் திணைக்களத் தலைவர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் | 20,000.00 |
| 04. | நிர்வாக உத்தியோகத்தர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், நிதி உதவியாளர்கள் , காசோலைகளைக் கையாளும் அலுவலர்கள் | 15,000.00 |
| 05 | சாரதிகள் | 7,500.00 |

5. மேலும், இணைப்பு (I)ல் காட்டப்பட்டதற்கு அமைவாக பிணைப்பணப் பதிவேடு பேணப்படுவதனை சகல பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அத்துடன், காலத்திற்குக் காலம் அதனைச் சரிபார்த்து உறுதிப்படுத்தி முதலொப்பம் / சுருக்கொப்பம் இடுவதற்குப் பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

6. பிணைப்பணம் செலுத்திய அலுவலர் பிறிதொரு அமைச்சிற்கு அல்லது திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்படும்போது அது பற்றிய முழு விபரங்களும், ஆவணங்களும் உரிய அமைச்சிற்கு அல்லது திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா - கௌரவஆளுநர் அவர்களிற்கு அறியத்தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா } தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா }

இணைப்பு - I

# பிணைப்பதிவேடு

| இல | அலுவலர் பெயர் | பதவி | செலுத்தவேண்டிய பிணைப்பணம் | செலுத்தப்பட்ட பிணைப்பணம் | வங்கிச் சேமிப்புப் புத்தக/ வைப்புச் சான்றிதழ் இல | இடமாற்றம் பெற்றிருப்பின் அமைச்சு/திணைக்களம் | தவணைப் பணத்தை புதுப்பித்தல்/ திகதி / யாரால் | உரிமைக்கோரிக்கை சான்றிதழ் இலக்கம். திகதி | வேறு குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4 | | | | | | | | | |
| 5 | | | | | | | | | |
| 6 | | | | | | | | | |
| 7 | | | | | | | | | |